பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 15 ஞாயிற்றுக்கிழமை 28.03.2021 கதிர் 11

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் பலி

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாரதிபுரம் பகுதியில் இன்று காலை மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார்.

அவர் தனது குடும்பத்தோடு புளியம் பொக்கணை கோயிலுக்குச் செல்வதற்காக வாகனத்தை மின்சார சுத்திகரிப்பு இயந்திரத் தால் கழுவிக் கொண்டிருக்கின்ற

☞2

# திருநெல்வேலி பாற்பண்ணை கிராமம் முடக்கம்!

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்., நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக் குட்பட்ட திருநெல்வேலி, பாற்பண்ணை கிராம அலுவ லகர் பிரிவு முற்றாகத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் 51 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ள நிலையிலேயே பிர தேசத்தை தனிமைப்படுத்த நடவடிக்கையெடுக்கப்பட் டுள்ளது என யாழ். மாவட்ட அரச அதிபரும் மாவட்ட கொரோனாத் தடுப்புச் செயலணியின் தலைவருமான க.மகேசன் இன்று தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் இன்று நடை பெற்ற உயர்மட்டக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திருநெல்வேலி பொதுச் சந்தைக் கடைத் தொகுதி வியாபாரிகளுக்கும் அங்கும் பணியாற்றும்

☞2



## கொரோனாவின் தாண்டவத்தையடுத்து

# யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகள் ஒரு வாரம் மூடல்

**(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)**

**யாழ்ப்பாணம், மார்ச் 28**

**யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட் பட்ட அனைத்துப் பாடசாலைகளும் ஒரு வாரத்துக்கு மூடப்படுகின்றன என்று அறி விக்கப்பட்டுள்ளது.**

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று நிலைமை அதிகரித்து வரும் நிலையில் யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட அனைத்துப் பாட சாலைகளும் நாளையிலிருந்து ஒரு வாரத்துக்கு மூடப்படுகின்றன என்று யாழ். மாவட்ட அரச அதிபரும் மாவட்ட கொரோனாத் தடுப்புச் செயலணியின் தலைவருமான க.மகேசன் தெரிவித் துள்ளார்.**

☞2

## முதலை இழுத்துச் சென்ற சிறுவன் சடலமாக மீட்பு!

திருகோணமலை, சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இத்திக் குளத்தில் குளிக்கச் சென்ற சிறுவன் முதலையின் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்த நிலையில் இன்று சடல மாக மீட்கப்பட்டார்.

தோப்பூர், பள்ளிக்குடியிருப்பு - இத்திக்குளம் பகுதியைச் சேர்ந்த கோணலிங்கம் லேனுஜன் (15 வயது) என்ற சிறுவனே இன்று சடல மாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

இத்திக்குளம் குளத்தில் நேற்று இரண்டு சிறுவர்களுடன் நீராடிக் கொண்டிருந்த குறித்த சிறுவனை முதலை இழுத்துச் சென்றது என வும், இதையடுத்து அச்சிறுவனுடன் சென்ற சிறுவர்கள் வீட்டுக்குச் சென்று தகவலைக்

☞2

## யாழில் அடுத்து வரும் சில நாள்களுக்கு தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிக்கும்

### இம்மாதம் இதுவரை 300 பேருக்குக் கொரோனா



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இந்த மாதம் இதுவரை 300 இற்கும் மேற்பட்டோர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையா ளம்காணப்பட்டுள்ளனர் என்று யாழ். மாவட்ட அரச அதிபரும் மாவட்ட கொரோனாத் தடுப் புச் செயலணியின் தலைவருமான க.மகே சன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் இன்று நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்தின் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

☞2



### சமூக இடைவெளியைப் பின்பற்றாது

## பி.சி.ஆர். பரிசோதனைக்காக யாழில் முண்டியடித்த மக்கள்!

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ். மாநகரில் முடக்கப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள், முகாமையாளர்கள், பணி யாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் அனைவருக்குமான பி.சி. ஆர். பரிசோதனை இன்று காலை முதல் மேற்கொள்ளப்பட்டது.

யாழ். மாநகர் நவீன சந்தைக் கட்டடத் தொகுதியின் மூன்று இடங்களில் யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில் அங்கு நூற்றுக்கணக்கானவர்கள் சமூக இடை வெளியைப் பின்பற்றாது பரிசோதனைக்காக ஒன்றுகூடினர்.

யாழ்ப்பாணத்தின் பிரபல ஆசிரியர்களின்

ZOOM இன் ஊடான புலமைப் பரிசில் வகுப்புக்கள்

யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை , யாழ் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் மற்றும் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி ஆகிய பிரபல பாடசாலை ஆசிரியர்களின் ஒன்றிணைந்த கற்பித்தல்

| | |
|---|---|
| மாதாந்தம் | 05 ஆசிரியர்களின் 45 மணி நேர வகுப்புக்கள் (தினமும் மாலை 7.00 – 8.30 வரை) |
| கட்டணம் 1000/= | நேர்த்தியாக தயாரிக்கப்பட்ட முன்வைப்புக்களின் ஊடான கற்பித்தல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நிகழ்நிலைப் (Online) பரீட்சை |

குறித்த ஆசிரியர்களின் தரம் 3 , 4 மாணவர்களுக்கான வகுப்புக்களும் நடைபெறுகின்றது

உங்கள் பிள்ளைகள் பல ஆசிரியர்களிடம் ஒரே இடத்தில் ஒரே கட்டணத்தில் கற்பதால் ஏற்படும் நன்மைகளை எண்ணிப்பாருங்கள்

தொடர்புகளுக்கு 076 432 5688

## திருநெல்வேலி சந்தை கொத்தனி: 177 பேருக்கு இதுவரை கொரோனா

### வடக்கு சுகாதார திணைக்களப் பணிப்பாளர் தெரிவிப்பு

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

திருநெல்வேலி பொதுச் சந்தை மற்றும் அதனைச் சூழவுள்ள வர்த்தக நிலையங் களோடு தொடர்புபட்ட 177 பேருக்கு இந்த மாதம் இது வரை கொரோனா வைரஸ் உறுதி செய்யப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சுகா தார திணைக்களப் பணிப் பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ் வரன் தெரிவித்தார்.



யாழ். குடாநாட்டில் தற் போது அதிகரிக்கும் கொரோனா

☞2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் அடுத்து வரும் சில நாள்களுக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று மாத்திரம் 143 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அடுத்து வரும் ஓரிரு நாள்களில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து குறைவடையும் எனச் சுகாதாரத் துறையினர் அறிவித்துள்ளனர்.

சுயதனிமைப்படுத்தல் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. நேற்றிரவு வரை 244 குடும்பங்கள் சுயதனிமைப் படுத்தலில் வைக்கப்பட்டுள்ளன.

நல்லூர் மற்றும் யாழ்ப்பாணம் மாநகர சுகாதாரப் பிரிவுகளில் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்துக் காணப் படுகின்றது.

யாழ்ப்பாணம் மாநகர், திருநெல்வேலி நகர் கடைகளை மூடி உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் சுயதனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளனர். - என்றார்.

## திருநெல்வேலி சந்தை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிலைமை தொடர்பில் இன்று மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தலைமையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலையடுத்து இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திருநெல்வேலி பொதுச்சந்தையில் கடந்த மாதமும் எழுமாற்றாக பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டபோது கொரோனா வைரஸ் தொற்றுடன் எவரும் அடையாளம் காணப்படவில்லை. இந்த மாதமே தொற்று தீவிர பரவலடைத்துள்ளது. திருநெல்வேலி பொதுச் சந்தையில் தொடர்ந்தும் பி.சி.ஆர். பரிசோதனை இடம்பெறும். அதேகாலத்தில் ஏனைய சந்தைகளும் கண்காணிக்கப்படும்.

இதேநேரம், யாழ். மாநகரில் மூடப்பட்டுள்ள வர்த்தக நிலையத்தினரை சுயதனிமைப்படுத்தலில் இருக்குமாறும், வழக்கமான நிகழ்வுகளை இரத்துச் செய்யுமாறும் கோரப்பட்டுள்ளது. - என்றார்.

## முதலை இழுத்துச் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கூறியதையடுத்து அங்கு ஓடிச் சென்ற சிறுவனின் தந்தை, தன்னுடைய மகனை முதலை இழுத்துச் செல்வதை அவதானித்தார் எனவும் பொலிஸ் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

காணாமல் போயிருந்த சிறுவன் முதலை கடித்த நிலையில் கிராம மக்களின் உதவியுடன் இன்று காலை சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் சம்பூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ். கல்வி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், யாழ். மாவட்ட அரச அதிபர் ஆகியோர் ஆராய்ந்தே மேற்படி தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

அதற்கமைய தற்போதுள்ள இடர் காலத்தைக் கருத்தில்கொண்டு நாளை முதல் எதிர்வரும் 4ஆம் திகதி வரை யாழ். கல்வி வலயப் பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் இடைநிறுத்தப்படுகின்றன என்று யாழ். மாவட்ட அரச அதிபர் மேலும் கூறியுள்ளார்.

## திருநெல்வேலி .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொழிலாளர்களுக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியிருந்த நிலையில், பாற்பண்ணை பிரதேசத்தில் நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அங்கு 51 பேருக்குத் தொற்று உறுதியாகியுள்ளது என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் பாற்பணை கிராமத்துக்கான போக்குவரத்துக்கள் முடக்கப்பட்டுள்ளன. அந்தப் பிரதேசத்துக்குள் வெளியார் நுழையாதவாறும், அங்குள்ளவர்கள் வெளியில் செல்லாதவாறும் இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரால் வீதித் தடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

அத்தியாவசிய சேவை, தொழில் நிமித்தம் வெளியில் வருகை தருவோர் அலுவலக அடையாள அட்டையைக் காண்பித்து வெளியேற முடியும்.

சிறப்புக் காரணங்களுக்காக கிராமத்திலிருந்து வெளியில் செல்வோர் பொதுச் சுகாதார பரிசோதகர்களிடம் விண்ணப்பித்து அனுமதி கிடைத்தால் பயணிக்க முடியும் - என்றார். இதேவேளை, யாழ். நகரின் மத்திய பகுதி கடந்த வெள்ளிக் கிழமை முதல் முடக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மின்சாரம் தாக்கி .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வேளையில் சுத்திகரிப்பு இயந்திரத்தின் மின் ஒழுக்கால் மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

ஒரு பிள்ளையின் தந்தையான 39 வயதுடைய இராசலிங்கம் ஜெயபாலன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

**விளம்பரத் தொடர்புகளுக்கு -**
**மின்னஞ்சல் -**
**kalaikkathiradvt@gmail.com**
**தொலைபேசி இலக்கம்-**
**076 443 8622**

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சவாலை எதிர்கொள்வதில் தோல்வி?

கொரோனாப் பரவலின் வேகத்தால் அதிர்ந்திருக்கின்றது யாழ்ப்பாணம். குறிப்பாக யாழ் நகரமும் அண்டிய பிரதேசங்களும்.

அவற்றுக்கு வெளியில் நிலைமை என்ன என்பது உரிய சோதனைகளின் பின்னர்தான் உறுதிப்படுத்தப்படும். அது வரையில் அங்கெல்லாம் பெரிய அளவில் பரவல் இல்லை என்று நம்பிக் கொண்டு இருக்க வேண்டியதுதான்.

யாழ் நகர நிலைமை எதிர்பார்க்கப்பட்டதே. இந்த நிலைமை என்றோ ஒரு நாள் வருவது, தவிர்க்க முடியாதது என்பது பலருக்கும் தெரிந்திருந்தது.

மனித வாழ்வில் சாவு தவிர்க்க முடியாதது. என்றோ ஒரு நாள் அது வந்தே தீரும். யாரும் இங்கு சாசுவதமாக வாழப் போவதில்லை. ஆனால் அந்தச் சாவை இயன்ற வரையில் தள்ளிப்போட்டு நீண்ட காலம் ஆயுளுடன் வாழ்வதுதான் வாழ்க்கையின் வெற்றி என்பது எல்லோருக்கும் தெரியும்.

அதுபோலத்தான், கொரோனா நெருக்கடியும் இயன்றளவில் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

கொரோனாப் பேரரக்கன் என்ற நுண்மியை உலகில் இருந்து முற்றாக ஒழிக்கும் வழிவகையை நமது விஞ்ஞானம், மருத்துவம் இன்னும் கண்டுபிடிக்கவில்லை.

அதற்கு எதிர்ப்பு சக்தியுடையதாக மனிதத்துவத்தை மாற்றுவதன் மூலம் அதன் பிடியை – நாசத்தை – அழிப்பு வேலையை – குலைப்பதே இப்போதைய முயற்சி.

மனிதர்களுக்குத் தடுப்பூசி ஏற்றுவதன் மூலம் அந்த நுண்மியை எதிர்கொள்ளும் உடல் வைராக்கியத்தை உருவாக்குவதன் வாயிலாக அதன் பேரழிவிலிருந்து மனித குலத்தைக் காப்பதுதான் இப்போதைய மருத்துவ உத்தி.

அதனை – தடுப்பூசி முறையை – உலகெங்கும் வியாபித்து செயற்படுத்தும் வரையில் கொரோனாப் பரவலையும், அதன் மூலமான பாதிப்புகள், இழப்புகளையும் கட்டுப்படுத்துவதே இப்போதைய தந்திரோபாயம்.

அப்படியான கட்டுப்பாட்டுக் கவசத்தை மனித குலத்தின் பெரும்பகுதி பெற்றுக் கொள்ளும் வரை அந்த நுண்மியின் பரவலை மட்டுப்படுத்துவதற்காக முகக் கவசம் அணிவது, கைகளை அடிக்கடி தொற்று நீக்கி கொண்டு கழுவுதல், சமூக இடைவெளியைப் பேணுதல் போன்ற விதிமுறைகளை நாம் தொடர்ந்து பின்பற்ற வேண்டும்.

அப்படி அந்தப் பழக்க வழக்கங்களைக் கைக்கொண்டு, கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்திக் கொண்டு, மறுபுறத்தில் தடுப்பூசி செலுத்துகையை தீவிரப்படுத்த வேண்டும்.

இதுதான் இப்போது நாம் பின்பற்றவேண்டிய பின்பற்றியிருக்க வேண்டிய இரட்டை அணுகுமுறையாக இருக்க வேண்டும்.

ஆனால், நாம் இதில் இரண்டிலுமே புத்திசாதுரியமாக நடக்கவில்லை என்றே தோன்றுகின்றது.

சமூக சிரத்தையின்றி, கொரோனாத் தொற்றுப் பரவலைத் தடுக்கும் நடவடிக்கைகளை ஒழுங்காகப் பின்பற்றாமல் இருந்து, அந்தப் பரவலுக்கு நாமே வெற்றிலை வைத்து அழைத்துள்ளோம் என்பதை பரிசோதனை முடிவுகளை காட்டுகின்றன.

குறைந்த எண்ணிக்கை சுகாதார, மருத்துவ அதிகாரிகள் இங்கு இந்த உலகப் பெருஞ்சவாலை எதிர்கொள்ள இரவு, பகல் பாராது உழைத்து வருகின்றனர். அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் விதத்தில் பொதுமக்களாகிய நாம் நடந்து கொள்கின்றோமா என நாங்கள் ஒவ்வொருவருமே நம்மை நாமே கேட்க வேண்டும்.

நேற்று யாழ் நகரத்தில் கொரோனாத் தொற்று பரிசோதனைக்குக் கூடிய நம்மவர்கள் முகக் கவசங்களுமின்றி, சமூக இடைவெளியையும் மறந்து, தமக்குள், இடிபட்டு, நெருக்குப்பட்டு பண்ணிய திருவிளையாடல்களைப் பார்த்தபோது அந்த நிகழ்வை ஒட்டியே ஒரு கொரோனாக் கொத்தணி புதிதாக உருவானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று கூறமுடியும்.

கொரோனாத் தொற்றுப் பரிசோதனைக்கு அழைத்தவர்கள் சுகாதார அதிகாரிகளே, ஆகவே அவர்கள்தான் இப்படி மக்கள் சமூக இடைவெளியைப் பேணாமல் ஒன்று திரண்டமைக்குப் பொறுப்பு என்று குற்றஞ்சாட்டுப் பந்தை இலகுவாக அதிகாரிகளின் களத்துக்குள் நாம் அடித்து விடமுடியாது.

நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியபடி குறைந்த எண்ணிக்கையான அதிகாரிகளுடன்தான் இந்தப் பெருஞ்சவாலை அவர்கள் எதிர்கொண்டுள்ளனர் என்ற யதார்த்தத்தை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அதேசமயம் மக்கள் என்ற முறையில் – சமூக அங்கத்தவர்கள் என்ற வகையில் – எமக்குள்ள சமூகப் பொறுப்பையும், சமுதாயக் கடப்பாட்டையும் நாங்களே உணர்ந்து செயலாற்ற வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

மக்களுக்குரிய தடுப்பூசிகளை விரைந்து வழங்குவதில் ஆட்சிக் கட்டமைப்பு இழைத்த தவறும், தாமதமும் கூட இத்தகைய பரவல் நிலைமை மோசமடைவதற்குரிய காரணமாகும்.

பொதுமக்களும் அரசும் தத்தமது பொறுப்புக்களையும் கடப்பாடுகளையும் உணர்ந்து, தாமதமின்றி விரைந்து ஆற்றினால் மட்டுமே கொரோனாத் பேரரக்கனினால் ஏற்படும் அழிவுகளை நாம் குறைக்க முடியும்.

# நிபுணர்குழு அங்கீகரிக்காத தடுப்பூசியை கொள்வனவு செய்ய அரசு திட்டமிடுகிறது

## எரான் விக்கிரமரத்ன எம்.பி. சுட்டிக்காட்டு



இலங்கையில் கொவிட் கட்டுப்படுத்தலுக்காக அவசர பயன்பாட்டுக்கு உகந்த தடுப்பூசிகள் தொடர்பில் தீர்மானிப்பதற்கு பேராசிரியர் ஹசித டி சில்வா தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவால் அனுமதி வழங்கப்படாத தடுப்பூசியை கொள்வனவு செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறான தடுப்பூசியை நாட்டு மக்களுக்கு வழங்க அனுமதிக்க முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

கொவிட் தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகளில் பாரபட்சம் காட்டப்படுகின்றமையை ஏற்றுக் கொள்ள முடியாது. உலக சுகாதார ஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்படாத எந்தவொரு தடுப்பூசியையும் பொது மக்களுக்கு வழங்க அனுமதிக்க முடியாது. தடுப்பூசி வழங்கும் செயற்திட்டத்தை முன்னெடுப்பதற்கு விசேட குழுவொன்றை நியமித்து அதற்கமையவே செயற்பட வேண்டும்.

எனினும் கடந்த ஆண்டு டிசெம்பரில் இதற்கான பேராசிரியர் ஹசித டி சில்வா தலைமையில் ஐவர் கொண்ட விடே நிபுணர்கள் குழுவொன்று நியமிக்கப்பட்டது. குறித்த தடுப்பூசி தொடர்பான அறிக்கையை கடந்த 17 ஆம் திகதி தேசிய மருந்துகள் ஒழுங்குறுத்துகை அதிகாரசபைக்கு அனுப்பி வைத்துள்ளது. அதில் குறித்த தடுப்பூசியை தொடர்பாக கிடைத்துள்ள தகவல்கள் போதாது எனவும், எனவே அதனை இலங்கையில் பயன்படுத்த முடியாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இக்குழுவின் தலைவரான பேராசிரியர் ஹசித டி சில்வா தற்போது பதவி விலகியுள்ளார். இவ்வாறான செயற்பாடுகள் துரதிஷ்டவசமானவையாகும். அரசியல் அழுத்தங்களின் காரணமாகவே இவ்வாறு இடம்பெறுகிறது.

அத்தோடு இந்தக் குழுவால் குறித்த தடுப்பூசிக்கு அனுமதி வழங்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் எவ்வாறு அதனைப் பொது மக்களுக்கு வழங்க முடியும்? நாட்டிலுள்ள அனைத்து பிரஜைகளுக்கும் தடுப்பூசி வழங்கப்பட வேண்டிய அதே வேளை, அவை அனுமதிக்கப்பட்ட தடுப்பூசியாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

தடுப்பூசி தொடர்பில் அரசியல்வாதிகளால் அல்லது சுகாதார அமைச்சால் தீர்மானிக்க முடியாது. அதனை தடுப்பூசி தொடர்பான விசேட குழு மாத்திரமே தீர்மானிக்க முடியும். அதற்காகவே நாட்டில் தேசிய மருந்துகள் ஒழுங்குறுத்துகை சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதனை மீறிய செயற்பட இடமளிக்க முடியாது. எனவே, எந்தத் தடுப்பூசி இலவசமாகக் கிடைத்தாலும் விசேட நிபுணர்களின் குழுவின் அனுமதியின்றி அவற்றை வழங்க முடியாது.

# வவுனியா வைத்தியசாலை தாதியருக்கு கொரோனா

வவுனியா பொது வைத்தியசாலையில் கடமை புரியும் தாதிய உத்தியோகத்தர்கள் இருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

வவுனியா வைத்தியசாலையின் நோயாளர் விடுதியில் பணி புரியும் தாதியொருவருக்கு அன்ரிஜென் பரிசோதனையில் தொற்று இருக்கின்றமை உறுதிசெய்யப்பட்டது.

இதையடுத்து, அவருடன் நெருங்கிப் பழகிய மற்றொரு தாதிக்கும் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த இருவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனையை முன்னெடுப்பதற்காக மாதிரிகள் அனுப்பப்பட்டுள்ளன.

இதேவேளை குறித்த தாதியர்களுடன் தொடர்புகளைப் பேணிய சிலர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், கொரோனாத் தொற்று கண்டறியப்பட்ட தாதியர் இருவரையும் கிளிநொச்சி மற்றும் கொழும்பில் அமைந்துள்ள கொரோனா வைத்தியசாலைக்கு மாற்றும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

# நல்லூர் ஆலயத்தின் புனிதத்தைப் பேணவே சுற்றாடலில் கழிவு எண்ணெய் ஊற்றப்பட்டது

## இப்படிக் கூறுகின்றது ஆலய நிர்வாகம்



யாழ்ப்பாணம், மார்ச் 28

நல்லூர் ஆலயச் சூழலின் புனிதத்தைப் பேணும் வகையில் சிலர் நடந்துகொள்வதனால் அதனைக் கட்டுப்படுத்தவே கழிவு எண்ணெய் ஊற்றப்பட்டதாக ஆலய நிர்வாகத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் கோயிலில் விசமிகளால் கழிவு எண்ணெய் ஊற்றப்பட்டதாக நேற்று (சனிக் கிழமை) காலை ஊடகங்களில் செய்திகள் வெளியாகிய நிலையில் ஆலயத் தரப்பு இதனை மறுத்துள்ளது.

அத்துடன், ஆலயத்தின் தேர் முட்டி உள்ளிட்ட பகுதிகளில் சில காதல் ஜோடிகள் அமர்கின்றமையைத் தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

நல்லூர் ஆலயச் சூழலுக்கு வரும் காதலர்கள் அங்கு அமர்ந்து கோயிலின் புனிதத்தைக் கெடுக்கும் வகையில் வேண்டத்தகாத செயல்களில் ஈடுபட்டு வந்தனர் எனவும், இது தொடர்பில் பல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டும் இதனைத் தடுக்க முடியாத கட்டத்தில் கழிவு எண்ணெய் ஊற்ற வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா பாதிப்பு மீண்டும் அதிகரிப்பு

## சென்னையில் ஒரே நாளில் 775; தமிழகத்தில் 2,089

தமிழகத்தில் நேற்று கொரோனாவால் 2 ஆயிரத்து 89 பேர் பாதிக்கப்பட்டனர். சென்னையில் 775 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

தமிழகத்தில் பெப்ரவரி 5 ஆம் திகதி முதல் கொரோனாவால் பாதிக்கப்படு வோரின் எண்ணிக்கை 500க்கும் கீழ் குறைந்தது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்பியது. இந்த நிலையில் கொரோனாவழிகாட்டிநெறிமுறைகளை மக்கள் கடைப்பிடிப்பதில் அலட்சியம் காட்டியதால் குறைந்து காணப்பட்ட கொரோனாத் தொற்று பரவல் மார்ச் 5 ஆம் திகதி 500ஐத் தாண்டியதாக சுகாதாரத் துறையினர் எச்சரித்திருந்தனர். அன்றைய தினம் முதல் தொற்று பரவல் வீதமும் அதிகரித்து வருகிறது.

இப்போது கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் தினசரி எண்ணிக்கை இரண்டாயிரத்தை தாண்டியது. அதன்படி, நேற்று தமிழகத்தில் இரண்டாயிரத்து 89 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து மாநில சுகாதாரத்துறை நேற்று வெளியிட்ட அறிக்கையில், 'தமிழகத்தில் 85,173 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்ததில் 2,089 பேருக்கு தொற்று உறுதியானது. ஒன்பது பேர் நேற்று உயிரிழந்துள்ளனர். இதனால் மரண எண்ணிக்கை 12,157 ஆக உயர்ந்துள்ளது. இதுவரை தமிழகத்தில் 8,77, 279 பேர் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில், 8,52, 463 பேர் குணமடைந்துள்ளனர். இதேபோல், மருத்துவமனைகளில் சிகிச்சைபெற்று வருபவர்களின் எண்ணிக்கை 12,157 ஆக உயர்ந்துள்ளது. சென்னையைப் பொறுத்தவரை நேற்று புதிதாக 775 பேருக்கு பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

சென்னைக்கு அடுத்தபடியாக செங்கல்பட்டில் 186 பேருக்கும், கோவையில் 185 பேருக்கும், திருவள்ளூரில் 110 பேருக்கும் கொரோனாத் தொற்று பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நேற்று சென்னையில் நால்வரும் புதுக்கோட்டையில் இருவரும் செங்கல்பட்டு, திருவள்ளூர், மதுரை ஆகிய இடங்களில் தா ஒவ்வொருவரும் சிகிச்சை பலனின்றி இறந்துள்ளனர்'



என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டமன்றத் தேர்தல் நெருங்கும் நேரத்தில் தமிழகத்தில் தொடர்ந்து அதிகரித்து வரும் கொரோனா பாதிப்பு பொது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

## ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்க முடிவெடுத்துள்ள டி.ராஜேந்தர்



'லட்சிய தி.மு.க. இந்தத் தேர்தலில் யாருக்கும் ஆதரவு அளிக்காது' என்று அந்தக் கட்சியின் தலைவர், டி.ராஜேந்தர் அறிவித்துள்ளார். 'நாடும் மக்களும் நல்லா இருக்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன்' என்று அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

'மறைந்த முன்னாள் முதல்வர், அம்மா காலத்திலிருந்து தொடங்கி இந்நாள் துணை முதல்வர், அண்ணா தி.மு.க.வின் ஒருங்கிணைப்பாளர் என்ற நிலையிலுள்ள மாண்புமிகு திரு.ஓ.பி.எஸ். அய்யா அவர்கள் என் நீண்ட நாள் நண்பர் ஆவார். நடைபெறும் இந்த 2021 சட்டமன்ற தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் தொடங்குவதற்கு முன்பு மாண்புமிகு ஓ.பி.எஸ் அய்யா அவர்கள் என்னை அழைத்தார், சென்றேன். மரியாதை நிமித்தமாக சந்தித்தேன். கையில் பூங்கொத்து ஒன்றை தந்தேன் கண்ணியமாய் விடைபெற்று வந்தேன்.

'மறைந்த முதல்வர் அம்மா அவர்கள் இல்லாமல் அண்ணா தி.மு.க. சந்திக்கின்ற முதல் சட்டமன்றத் தேர்தல் களம் இது. அதைப்போல் மறைந்த முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் இல்லாமல் தி.மு.க சந்திக்கின்ற முதல் சட்டமன்ற தேர்தல் களமும் இதுதான். இரண்டு கட்சிகளுக்குமே இருக்கிறது அவரவர் பலம். இதைத்தவிர கூட்டணியென்று சேர்த்திருக்கிறார்கள் பக்க பலம்.

'இரண்டு கட்சிகளுமே பார்த்துக் கொள்ளப்போகின்றன பலப்பரீட்சை. இதில் நான் போய் என்ன செய்யப் போகிறேன் புது சிகிச்சை? ஒருவருடைய வாக்கு வன்மை, அவர் வார்த்தையில் இருக்கும் தன்மை, அதில் வெளிப்படும் உண்மை. அதற்கு ஒரு சக்தி இருக்கிறது என்று சில முன்னாள் முதல்வர்கள் நம்பினார்கள். அதன் அடிப்படையில் என்னைத் தேர்தல் பிரசாரத்திற்கு அழைத்தார்கள். அது ஒரு காலம்.

'கொள்கையை சொல்லி ஓட்டு கேட்டதெல்லாம் அந்தக் காலம். கொடுக்க வேண்டியதை கொடுத்து ஓட்டு வாங்கிக் கொள்ளலாம் என்பது இந்தக் காலம். காலமும் சரியில்லை, களமும் சரியில்லை. கரையில் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கலாம் என்று முடிவெடுத்து விட்டேன். பத்தும் பத்தாதற்கு இது கொரோனா காலம்.

'பாதுகாப்பு வேண்டுமென்றால் அணிந்து கொள்ள வேண்டும் முகமூடி. பக்குவப்பட்டவனாய் வாழ வேண்டுமென்றால் அமைதி காக்க வேண்டும் வாய்மூடி. இந்தச் சட்டமன்றத் தேர்தலில் எங்கள் இலட்சிய தி.மு.க யாரையும் ஆதரிக்கவும் இல்லை, அரவணைக்கவும் இல்லை. நடுநிலைமையோடு இருக்க விரும்புகிறோம். நாடும், நாட்டு மக்களும் நல்லா இருக்க வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்திக்கிறோம்' என்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார் டி.ஆர்.

## கருத்துக்கணிப்புக்குத் தடை!

'லோக்சபா இடைத்தேர்தல் மற்றும் சட்டசபைத் தேர்தல் நடைபெறும் மாநிலங்களில் மார்ச் 27 முதல் ஏப்ரல் 29 ஆம் திகதி வரை தேர்தலுக்குப் பிந்திய கருத்துக்கணிப்பு நடத்தவோ, அதன் முடிவுகளை வெளியிடவோ கூடாது' என தேர்தல் ஆணையம் தடை விதித்துள்ளது.

தமிழகம், புதுச்சேரி, கேரளா, அசாம், மேற்கு வங்கம் ஆகிய 5 மாநிலங்களில் சட்டசபைத் தேர்தல் நடைபெறுகிறது. அசாம், மேற்கு வங்கத்தில் முதற்கட்ட வாக்குப்பதிவு நேற்று நடைபெற்றது. இந்த நிலையில் தேர்தல் ஆணையம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இந்திய தேர்தல் ஆணையம் 2021 பெப்ரவரி 26, மார்ச் 16 ஆகிய திகதிகளில் வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பில் தெரிவித்தபடி, சட்டசபைத் தேர்தல் மற்றும் மக்களவை இடைத்தேர்தல் நடைபெறும் மாநிலங்களில் மார்ச் 27 ஆம் திகதி காலை 7 மணி முதல் ஏப்ரல் 29 ஆம் திகதி மாலை 7.30 வரையான காலத்தில் தேர்தலுக்குப் பிந்திய கருத்துக் கணிப்பு நடத்தவோ, அதன் முடிவுகளை அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் அல்லது வேறு விதத்தில் வெளியிடவோ தடை விதிக்கப்பட்ட காலமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951/126 ஏ பிரிவு துணைப்பிரிவு 1 இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் படி இந்திய தேர்தல் ஆணையம் இதனை அறிவித்துள்ளது.

அத்தோடு, தேர்தல் நடைபெறும் பகுதிகளில் ஒவ்வொரு கட்ட தேர்தல் முடிவடையும் 48 மணி நேரத்துக்கு முன்பாக, கருத்துக் கணிப்பு அல்லது எந்தவித கணக்கெடுப்பு முடிவுகள் உட்பட தேர்தல் தொடர்பான எந்தவொரு கணிப்பீடுகளையும் இலத்திரனியல் ஊடகங்களில் வெளியிட தடைவிதிக்கப்படுகிறது. இது தொடர்பாக 2021 மார்ச் 24 ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிவிப்பினையும் வெளியிட்டுள்ள குறிப்பில் தேர்தல் ஆணையம் இணைத்துள்ளது.

## ஜனாதிபதி ராம்நாத் கோவிந்துக்கு 'பைபாஸ்' சிகிச்சை



ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் இலேசான இதயப் பிரச்சினை காரணமாக டெல்லி இராணுவ ஆராய்ச்சி மருத்துவமனையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு அங்கு வழக்கமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஜனாதிபதியை நேரில் சென்று நலம் விசாரித்தார்.

ஜனாதிபதியின் சிகிச்சைகள் பற்றி இராணுவ மருத்துவமனை வெளியிட்ட அறிக்கையில், "ஜனாதிபதியின் உடல்நிலை சீராக உள்ளது. மேல் சிகிச்சைக்காக டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் அவரை சேர்க்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது" - என தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, ஜனாதிபதி மாளிகை நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் இன்று மதியம் டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். மருத்துவர்களின் ஆலோசனைக்குப் பிறகு பைபாஸ் சிகிச்சை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. அது மார்ச் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது' என குறிப்பிடப்பட்டுள்ளது.

## கவச உடையையும் துளைக்கும் துப்பாக்கிக் குண்டுகள் பறிமுதல் சீனாவில் தயாரானவை என பாதுகாப்பு அதிகாரிகள் தகவல்



குண்டு துளைக்காத கவசத்தையும் தகர்க்கும் வல்லமை கொண்ட சீன தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட உருக்கு துப்பாக்கி குண்டுகள் காஷ்மீர் தீவிரவாதிகளிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட சம்பவம் இந்திய பாதுகாப்புத் துறையினரிடத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இந்திய பாதுகாப்பு படையினருக்கு இது மிகப்பெரிய அச்சுறுத்தலான விடயமாகக் கருதப்படுகிறது.

தெற்கு காஷ்மீரின் சோபியான் பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன் ஜெய்ஷ் இ முகமது தீவிரவாத அமைப்பின் உள்ளூர் அதிகாரி விலாயத் ஹுசேன் லோன் என்கிற சஜ்ஜித் அப்கானி, பாதுகாப்பு படையினர் நடத்திய என்கவுன்டரில் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

குறித்த நபர் தங்கியிருந்த இடத்தில் சோதனை நடத்திய போது 36 சுற்றுகள் கொண்ட கடின உருக்கினால் செய்யப்பட்ட துப்பாக்கிக் குண்டுகள் கைப்பற்றப்பட்டன. இது பாதுகாப்பு படையினருக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை மணியாக கருதப்படுகிறது.

'தீவிரவாதிகள் நடமாட்டம் அதிகமுள்ள தெற்கு காஷ்மீரில் பாதுகாப்புபடையினர் பயன்படுத்தும் வாகனங்கள் குண்டு துளைக்காத கவசங்களுடன் தயாரிக்கப்பட்டவை. வீரர்களும் புல்லட் - புரூப் கவசங்களை அணிந்தே பாதுகாப்பு பணியில் ஈடுபடுவர்.

ஆனால், புல்லட் புரூப் உடைகள் அணிந்திருந்தாலும் அவற்றையும் துளைத்து உயிரைப் பறிக்கும் வல்லமை கொண்டவைதான் இந்த சீன இரும்பு உருக்குக் குண்டுகள். வழக்கமான ஏகே - 47 ரக துப்பாக்கிகளில் பயன்படுத்தப்படும் குண்டுகள் இலேசான இரும்பு மேல் கவசத்துடன் தயாரிக்கப்பட்டிருக்கும். இவை குண்டு துளைக்காத கவசங்கள் மீது பட்டால், துளைக்க முடியாமல் கீழே சிதறி விழும்.

ஆனால், தற்போது கைப்பற்றப்பட்டுள்ள இரும்பு உருக்குக் குண்டுகள் கனமான இரும்பு மேற்பரப்பைக் கொண்டவையாகும். இவை குண்டு துளைக்காத கவசத்தையும் துளைத்துக் கொண்டு தாக்கும் வல்லமை கொண்டவை.

'இந்தக் குண்டுகள் சர்வதேச வரைமுறைகளின் கீழான வழமையான துப்பாக்கிக் குண்டுகளிடமிருந்து வேறுபட்டவை. சீன தொழில்நுட்ப உதவியுடன் சட்ட விரோதமாக தயாரிக்கப்படுபவை. இவற்றை காஷ்மீரில் தீவிரவாதிகள் பயன்படுத்துவது அதிகரித்துள்ளது. இதனால், பாதுகாப்பு படை வீரர்களின் குண்டு துளைக்காத கவசங்களை வலுப்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன' என்று இந்திய இராணுவத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த உருக்கு குண்டுகள், பாதுகாப்பான பதுங்கு குழியையும் துளைத்துக் கொண்டு உள்ளே புகுந்து தாக்கும் திறன் கொண்டவை என்று தெரிவிக்கும் நிபுணர்கள், 2016 ஆம் ஆண்டு புல்வாமா தாக்குதலிலும் தீவிரவாதிகள் இந்த உருக்கு குண்டுகளைப் பயன்படுத்தி இருக்கலாம் எனவும் கருதுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியான்மரில் ஒரே நாளில் 114 பேர் சுட்டுக்கொலை



மியன்மார், மார்ச் 28

மியன்மாரில் நேற்று ஒரே நாளில் 114 பேர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இதனையடுத்து மியன்மாரின் ஆயுதப்படை தினமான நேற்று உண்மையில் வெட்கக்கேடான நாள் என்று பதவி நீக்கம் செய்யப்பட்டவர்களால் உருவாக்கப்பட்ட போராட்டக் குழுவான சி.ஆர்.பி.எச்இன் செய்தி தொடர்பாளர் கூறியுள்ளார்.

இராணுவம் மக்களைப் பாதுகாக்கும் என்றும் ஜனநாயகத்திற்காக பாடுபடும் என்றும் கூறிய ஜெனெரல் மின் ஆங் ஹேலிங் கூறிய மறுநாளே, அவரின் கூற்றுக்கு முரண்பாடாக இந்த மிருகத்தனமான தாக்குதல் நடந்து உள்ளது. மியன்மாரின் ஆயுதப்படை தினத்தை கொண்டாடவிருப்பதால், அதற்கு இடையூறு செய்யும் விதமாக போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களது தலையில் அல்லது பின்பகுதியில் துப்பாக்கிச்சூடு நடத்தப்படும் என நேற்று முன்தினம் ராணுவம் எச்சரிக்கை விடுத்திருந்தது.

## அமெரிக்கா வோவொக்ஸ் தடுப்பூசி சோதனை செப்டம்பரில் இந்தியாவில் ஆரம்பமாகும்



'அமெரிக்காவின் கொவோக்ஸ் கொரோனா தடுப்பூசி சோதனை இந்தியாவில் வரும் செப்டம்பரில் ஆரம்பமாகும்' என சீரம் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி அதார் பூனவல்லா கூறியுள்ளார்.

இந்தியாவில் தற்போது கொவிஷீல்ட், கொவாக்சின் ஆகிய இரு கொரோனாத் தடுப்பூசிகள் பயன்பாட்டில் உள்ளன. இவை தவிர மேலும் சில தடுப்பூசிகள் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், அமெரிக்காவின் நோவாவாக்ஸ் நிறுவனம் தயாரித்துள்ள கொவோவாக்ஸ் தடுப்பூசி இந்தியாவில் சோதனை செய்யப்பட இருப்பதாக சீரம் நிறுவன நிறைவேற்று அதிகாரியான அதார் பூனவல்லா நேற்று தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தின் கொவிஷீல்ட் மருந்து உற்பத்திக்கான அனுமதியைப் பெற்றுள்ள சீரம் நிறுவனம் கொவோவாக்ஸ் மருந்தை இந்தியாவில் சோதனை செய்யும் உரிமத்தையும் பெற்றுள்ளது. எனவே வரும் செப்டம்பரில் கொவோவாக்ஸ் அறிமுகப்படுத்தப்படும் என அதார் பூனவல்லா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்தத் தடுப்பூசி இங்கிலாந்து, தென்னாபிரிக்கா போன்ற இடங்களில் மரபணு மாற்றம் பெற்ற புதிய வகை கொரோனா வைரசையும் எதிர்க்கும் வல்லமை கொண்டது என சீரம் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

## கருச்சிதைவு ஏற்பட்டால் சம்பளத்துடன் விடுமுறை முதல் நாடாக சட்டத்தை இயற்றியது நியூசிலாந்து



ஆண்களுக்கு இணையாக பெண்களும்அரசுஅலுவலங்களில் வேலை செய்து வருகிறார்கள். திருமணம் ஆன பெண்கள் குழந்தை பெறுவதற்கான சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளிக்கப்பட்டு வருகிறது. உலகில் ஏறக்குறைய அனைத்து நாடுகளிலும் இது நடைமுறையில்இருந்து வருகிறது.

பெண்கள் குழந்தைகளை பெறுவதைத் தவிர மற்றும் சில விடயங்களிலும்வேலைக்குவரும் போது கஷ்டப்படும்நிலை உள்ளது. கருவுற்ற சில வாரங்களில் துரதிருஷ்டவசமாக கருச்சிதைவு ஏற்பட்டால், அது பெண்களுக்கு உடலளவிலும், மனதளவிலும் மிகப் பெரியவேதனையைக்கொடுக்கும். இந்த வேதனையுடன் அலுவலகத்திற்கு வேலைக்கு செல்ல வேண்டும். அல்லது விடுமுறை எடுக்க வேண்டும். இதனால் கூடுதல் வேதனையுடன் மன அழுத்தமும் ஏற்படும்.

இதை கருத்தில் கொண்டு நியூசிலாந்து அரசு ஒருவேளை பெண் ஊழியர்களுக்கு கருச்சிதைவு ஏற்பட்டால், அவர்களுக்கு மூன்று நாள்கள் சம்பளத்துடன் கூடிய விடுமுறை கொடுக்க முடிவு செய்தது. இது குறித்த பிரேரணை கடந்த புதன் கிழமை அந்நாட்டு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உள்பட அனைவரும் இதற்கு ஆதரவு தெரிவிக்க ஒருமனதாக சட்டம் நிறைவேறியது.

இதனைத் தொடர்ந்து நியூசிலாந்தில் கருச்சிதைவு ஏற்பட்டால், பெண்கள் மூன்று நாள்கள் சம்பளத்துடன் கூடிய விடுமுறை எடுத்துக்கொள்ளலாம் என்பது நடைமுறைக்கு வருகிறது.

இச்சட்டத்தை இயற்றி, செயல்முறைக்கு கொண்டு வரும் முதல் நாடு நியூசிலாந்தாகிறது. இந்த மசோதாவை நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்த தொழிலாளர் எம்.பி. (Labour MP) ஜின்னி ஆண்டர்சன், "நாம் உலகில் முதலாவது நபராக இருக்கும்போது, கடைசி நபராக இருக்கமாட்டோம் என்பதை என்னால் உறுதியாக நம்ப முடியும். நம்நாட்டை பார்த்து மற்ற நாடுகளும் அதன் வேதனையை அறிந்து சம்பளத்துடன் கூடிய விடுமுறையை அங்கீகரிக்கும் சட்டத்தை தொடங்குவார்கள்" - என்றார்.

## சுயஸ் கால்வாயில் சிக்கிய கப்பல் மீட்டுவிடலாம் என நம்பிக்கை



சுயஸ் கால்வாயில் சிக்கியுள்ள சரக்குக் கப்பல் இந்த வாரத்தில் மீட்கப்படும் என மீட்புப் பணி நிறுவன அதிகாரி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

400 மீற்றர் நீளங்கொண்ட எவர்கிவன் சரக்குப் பெட்டகக் கப்பல் செங்கடல் - மத்தியத் தரைக்கடல் இடையே சுயஸ் கால்வாயில் சென்றபோது குறுக்காகச் சிக்கிக்கொண்டது.

கப்பலின் கீழ்ப்பகுதி மணலிலும் சகதியிலும் சிக்கியுள்ளதால் அதை மீட்கும் பணியில் நெதர்லாந்தைச் சேர்ந்த சுமித் சால்வேஜ் நிறுவனம் ஈடுபட்டுள்ளது. கப்பல் தரைதட்டிய இடத்தில் 20ஆயிரம் டன் மணலை அள்ளியபிறகும் அதை விடுவிக்க முடியவில்லை.

இந்நிலையில் மீட்பு நிறுவனத் தலைவர் பீட்டர் பெர்தோவ்ஸ்கி, டச்சுத் தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்துள்ளார். அதில் மணலை அகற்றவும், மிகப்பெரிய இழுவைக் கப்பல்களைக் கொண்டுவரவும் உள்ளதாகத் தெரிவித்தார். கால்வாய் நீர் மட்டம் உயரும்போது கப்பலை மீட்க முடியும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவில் உயர்க்கல்வியைத் தொடர அநேகமான மாணவர்களுக்கு ஓர் அரியவாய்ப்பு

Courses available:

Diploma | Bachelor Degree | Master Degree

- Business
- Hospitality
- Information Technology
- Engineering and
- Nursing

கிடைக்கப்படும் நன்மைகள்:

- படித்துக்கொண்டே ஒரு வாரத்தில்20 மணிநேரவேலைக்கான அனுமதி உண்டு
- பட்டபடிப்பை நிறைவுபெற்று 18 மாத வேலை செய்வதற்கான அனுமதி உண்டு

தொடர்புக்கு: HOTLINE: 0766228891

Australian Migration Consultants
41, George R De Silva Mw, Colombo - 13
0112437285
Email: sl.austvisa@gmail.com

இலங்கையில் கல்வி கற்ற பொறியியலாளர்களுக்கு ஆஸ்திரேலியா விசா!!!

Australian Skilled - Recognised Graduate Visa for Junior Engineers
(Graduated within 2 years)
18 Months to work and gain experience in Australia.

தகைமைகள்:

- வயது எல்லை 31
- பொறியியலாளர் பட்ட படிப்பு
- BSc.Engg from University of Moratuwa, University of Peradeniya, University of Jaffna, University of Ruhuna
- ஆங்கிலம் - IELTSaverage 6

தொடர்புக்கு: HOTLINE: 0766228891
Australian Migration Consultants
41, George R.De SilvalMw,
Colombo 13
0112437285, Email: sl.austvisagmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கைத் துண்டு துண்டாக்கவே மயிலந்தமடு, மாதவணை ஆக்கிரமிப்பு


ஸ்ரீநேசன் காட்டம்

ஜெனிவா, மார்ச் 28

மயிலத்தமடு,மாதவணை ஆக்கிரமிப்புக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் குரல் கொடுத்துள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கை புவியியல் ரீதியாகத் துண்டு துண்டாக பிரிக்க இலங்கை அரசு தலைமையில் பல முயற்சிகள் முன்னெடுக்கபட்டு வருகின்றமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

மேலும்,சார்லஸ் பெட்ரி அறிக்கை மற்றும்ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஆகியோரின் அறிக்கையின்படி, ஈழத்தமிழர்களை இனப்படுகொலையிலிருந்து பாதுகாக்க ஐக்கிய நாடுகள் சபை தவறிவிட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கை புவியியல் ரீதியாகத் துண்டு துண்டாகப் பிரிக்க இலங்கை அரசு தலைமையிலான முயற்சிகளாக சிங்கள குடியேற்றங்கள், பௌத்த விகாரைகள், வெற்றி நினைவுச் சின்னங்கள், தொல்பொருள் இட ஒதுக்கீடு, வனவிலங்கு சரணாலயங்கள், வனப்பாதுகாப்புக்கள் ஆகியவற்றை நிறுவுவதன் மூலம் தமிழ் கலாசாரம் மற்றும் வரலாற்றை திட்டமிட்டு அழிக்கும் ஒரு மூலோபாயத்துடன் அரசு உள்ளது.

மற்றும்விசேடபொருளாதார,கலாசார செயற்பாடுகளாலும் நிலப்பறிப்புகள் நடைபெறுகின்றன.பி2பிவெளிப்பாட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்றனர்.

அவர்களில் ஏறத்தாழ 200 இற்கும் மேற்பட்டோர் இலங்கைப் பாதுகாப்புப் பொலிஸாரால் விசாரிக்கப்படுகின்றனர். மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையால் குடியேறியசிங்களகுடியேற்றவாசிகளால் மட்டக்களப்பிலுள்ள மைலந்தமடு மற்றும் மாதவணைப் பகுதிகளில் உள்ள தமிழ் விவசாயிகளுக்குச் சொந்தமான கால்நடைகள் கொல்லப்பட்டும்,காயமாக்கப்பட்டும் வருகின்றன.

மேய்ச்சல் தரையும் அயல் மாவட்ட சிங்களவர்களால் அபகரிக்கப்படுகின்றன. 3 லட்சத்து 50 ஆயிரம் கால்நடைகளுக்காக 1000 இற்கும் மேற்பட்ட தமிழ் விவசாயிகள் மயிலத்தமடு மற்றும் மாதவனையிலுள்ள புல்வெளியைப் பயன்படுத்துகின்றனர்.

ராஜபக்ஷ ஆட்சியின் கீழ், 2020 ஆம் ஆண்டில் மகாவலி அதிகார சபை அம்பாறை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களைச் சேர்ந்த சிங்கள விவசாயிகளுக்காக ஒரு புதிய குடியேற்றத்தை நிறுவியுள்ளது.

உலகெங்கிலும் உள்ள 8 கோடி தமிழர்கள் சார்பாக ஐ.நா சபை உறுப்பினர்களிடம் கோருகின்றமை, இலங்கையில்இனஅழிப்பைஏற்படுத்தியவர்களை ஐ.சி.சி.க்கு ஒப்படைப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றிய பரிந்துரைகளைப் பின்பற்றுவதற்கு பாதுகாப்புச் சபையின் ஒரு சிறப்பு அமர்வை நடத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. இலங்கையை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பரிந்துரைக்க ஐ.நா.பாதுகாப்புச்சபை மற்றும் ஐ.நா பொதுச்சபை செயலாற்றக் கோருகின்றோம்.

2. ஒரு சர்வதேச சுயாதீனப் புலனாய்வு பொறிமுறையை நிறுவக்கோருகின்றோம்.

3. தொடர்ந்து நடைபெற்று வரும் மனிதவுரிமை மீறல்களுக்காக இலங்கையைத்தொடர்ந்துகண்காணிக்கவும், இலங்கையில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையரின் இருப்பை நிலை நிறுத்தவும்ஒருசிறப்புஅறிக்கையாளரைநியமிக்கக் கோருகின்றோம் என்றும் தெரிவித்துள்ளார்.

## வயலுக்குச் சென்ற ஒருவர் திடீரென விழுந்து மரணம்

திருகோணமலை,மார்ச் 28

திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வயலுக்குச் சென்ற ஒருவர் திடீரென மரணமடைந்துள்ளார் என கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் நேற்று காலை 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பேராறு, கந்தளாய் பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய சேகு இஸ்மாயில் பைசர் என்பவரே இவ்வாறு வயலுக்குச் சென்ற நிலையில் மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த மரணம் மாரடைப்பு காரணமாக ஏற்பட்டுள்ளதா அல்லது வேறு ஏதாவது விதத்தில் ஏற்பட்டுள்ளதா என்பது தொடர்பான பிரேத பரிசோதனைக்காக சடலம் கந்தளாய் தள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்ததோடு, சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## அம்பாறை மாவட்ட வீர வீராங்கனைகள் கராத்தேயில் 9 பதக்கங்களுடன் சாதனை

அம்பாறை,மார்ச் 28

விளையாட்டு அமைச்சினால் கடந்த சனிக்கிழமை அம்பாறை மாவட்டத்தில் உள்ள தெஹியத்தகண்டியில் நடைபெற்ற கிழக்கு மாகாண கராத்தே சுற்றுப்போட்டியில் அம்பாறை மாவட்டத்தை பிரதிபலித்து போட்டியிட்ட RAM KARATE DO ORGANIZATION ஐ சேர்ந்த வீர வீராங்கனைகள் 2 தங்கம், 4 வெள்ளி, 3 வெள்ளி அடங்கலாக மொத்தம் 9 பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளதுடன் இப்போட்டியில் தங்கம் மற்றும் வெள்ளி பதக்கம் வென்ற வீரர்கள் தேசிய விளையாட்டு விழாவில் பங்கேற்க தெரிவாகியுள்ளனர்.

இவ் வீரர்களுக்கான பயிற்சியினை ராம் கராத்தே டு அமைப்பின் பிரதம போதனாசிரியர் சிஹான் கே கேந்திர



மூர்த்தி தலைமையில் பயிற்றுவிப்பாளர்களான சென்ஸி கே.ராஜேந்திர பிரசாத், சென்ஸி கே.சாரங்கன் ஆகியோர் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது

## விபத்தில் காயமுற்ற இளைஞன் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

மட்டக்களப்பு,மார்ச் 28

விபத்தில் சிக்கி படுகாயம் அடைந்த நிலையில் மட்டு. போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த இளைஞன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுவாஞ்சிகுடி பொலிஸ்பிரிவிற்குட்பட்ட சம்பங்கேணி வீதி, சேனைத்துறை, மகிழூர் பிரதேசத்தைச் சேர்ந்த 19 வதுடைய நாகேந்திரன் டிலக்ஷன் என்பவர் கடந்த 19ம் திகதி மகிழூர் பிரதான வீதியூடாக மோட்டார் சைக்கிளில் சென்று கொணடிருக்கும் போது வேகக்கட்டுப் பாட்டை இழந்து வீதியில் தரித்து நின்ற லொறியுடன் மோதிய நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி கடந்த 26ஆம் திகதி உயிரிழந்துள்ளார் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிகுடி சுற்றுலா நீதிமன்ற நீதிவான் அவர்களின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற களுவாஞ்சிகுடி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம் சடலத்தை பார்வையிட்ட பின்னர் பிரேத பரிசோதனையின் பின்னர் பிரேதத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார்.சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத்தின் முப்பெரும் கலை விழா



மட்டக்களப்பு,மார்ச் 28

அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத்தின் முப்பெரும் விழாவில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தகுதி பெற்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் பிள்ளைகளையும், சேவையிலிருந்து ஓய்வு பெற்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களையும் பதவி உயர்வு பெற்ற உத்தியோகத்தர்களையும், பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்றது.

அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத்தின் தலைவர் ஏ.ஜி.முபாரக் தலைமையில் மட்டக்களப்பு மாநகர சபையின் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான கே.கருணாகரன், கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ.திசாநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர் .

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து கடந்த 2016, 2017, 2018, 2019 மற்றும் 2020 ம் ஆண்டுகளில் தரம் 5, புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றி சித்தி அடைந்த தொழிற்சங்க உறுப்பினர்களின் பிள்ளைகள் மற்றும் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் பதவி உயர்வு பெற்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் முதலானோர் பாராட்டி, பரிசில்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வின் சிறப்பம்சமாக அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத்தின் முகை விழா மலர் வெளியிட்டுவைக்கப்பட்டது.

## மட்டக்களப்பில் காட்டு யானைகளால் அரச நெல் களஞ்சியம் கடுமையான சேதம்

மட்டக்களப்பு,மார்ச் 28

மட்டக்களப்பு வெல்லாவெளி பிரதேசத்தின் தும்பங்கேணி கிராமத்தில் அமைந்துள்ள நெல் களஞ்சியசாலை யானைகளால் தாக்கப்பட்டு சேதமாக்கபட்டுள்ளது. இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு சுமார் 11 மணியளவில் பதிவாகியுள்ளது.

இதன்போது கட்டடத்தின் இரண்டு தூண்கள் முற்றாகவும் மேலும் 2 தூண்கள் பகுதி



யளவிலும் சேதமடைந்ததுடன் , புதிதாக பொருத்தப்பட்ட இரண்டு இரும்பு கதவுகளும் சேதமாக்கபட்டுள்ளது. அத்துடன் மின் இணைப்புகளும் தகர்த்தபட்டுள்ளது.

எனவே எதிர்காலத்தில் இவ்வாறான தொடர் சம்பவங்கள் இடம்பெறுவதை தவிர்க்க யானை வேலி அமைத்தல் போன்ற நிரந்தர தீர்வு எட்டப்பட வேண்டியதுடன். தற்காலிக தீர்வாக களஞ்சியசாலையில் உள்ள 200 மெட்ரிக் தொன்னுக்கும் மேற்பட்ட நெல் இருப்பினை உடன் விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கபட வேண்டும் என பலராலும் கோரிக்கை விடுக்கபடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதலாவது 20 - 20 போட்டியில் நியூசிலாந்து அதிரடி வெற்றி!

பங்களாதேஷ் - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான 3 இருபதுக்கு இருபது போட்டிகள் கொண்ட கிரிக்கெட் தொடரின் முதல் போட்டியில் நியூசிலாந்து அணி 66 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

ஹமில்டனில் இன்று நடைபெற்ற போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடி 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. டெவன் கொன்வே 52 பந்துகளில் 92 ஓட்டங்களையும் வில்யங் 30 பந்துகளில் 53 ஓட்டங்களையும் மார்ட்டின் கப்டில் 35, பிலிப்ஸ் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பங்களாதேஷ் அணியின் நசும் அஹமட் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலளித்துத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணியால் இருபது ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 144 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது. 66 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி தொடரில் 1 -0 என முன்னிலை பெற்றுள்ளது.

நியூசிலாந்து அணியின் இஷ் சோதி 4 விக்கெட்களையும் லொக்கி பெர்குசன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக நியூசிலாந்தின் டெவன் கொன்வே தெரிவானார். இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது இருபதுக்கு இருபது போட்டி வரும் 30ஆம் திகதி நப்பியரில் நடைபெறவுள்ளது.

# சி.எஸ்.கேயில் ரெய்னா, ஜடேஜா!

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனி, ருதுராஜ் கெய்க்வாட், அம்பாத்தி ராயுடு போன்றவர்கள் சென்னை சேப்பாக்கத்தில் பயிற்சிமேற்கொண்டு வந்தனர். சி.எஸ்.கே. தனது முதல் லீக் போட்டியை மும்பையில் விளையாட உள்ளதால் அவர்கள் தற்போது மும்பைக்குச் சென்றுள்ளார்கள்.

கடந்த சீசனில் விளையாடாத சுரேஷ் ரெய்னாவும் அவுஸ்திரேலிய தொடரில் காயமடைந்து, இந்த சீசனில் விளையாடுவாரா என்று சந்தேகிக்கப்பட்ட ஜடேஜாவும் இப்போது சி.எஸ்.கே.வின் பயோ பபிளுக்குள் இணைந்து சுய தனிமைப் படுத்தலில் உள்ளார்கள். இவர்களது இணைவு சென்னை சூப்பர் கிங்ஸ் ரசிகர்களுக்கு உற்சாகமளித்துள்ளது.

# யூசப் பதானுக்கும் கொரோனா தொற்று

இந்திய அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரரான யூசப்பதானுக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

லேசான அறிகுறிகளுடன் தொற்று இருப்பது உறுதியாயிருக்கிறது என்றும், வீட்டில் தனிமைப்படுத்திக்கொண்டு தேவையான மருத்துவ முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அனைத்தையும் எடுத்துள்ளதாகவும் யூசப் பதான் தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தன்னோடு தொடர்பிலிருந்தவர்களும் இயன்றவரை விரைவாக கொரோனா தொற்று பரிசோதனையை செய்துகொள்ளுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வீதிப் பாதுகாப்பு உலகக் கிரிக்கெட் தொடரில் இந்தியா லெஜெண்ட்ஸ் அணியில் விளையாடிய யூசப் பதான் சமீபத்தில் போட்டி நடைபெற்ற ராய்ப்பூரிலிருந்து வீடு திரும்பிய நிலையில் கொரோனா தொற்று



உறுதியாகியுள்ளது. அதே அணியில் தலைவராக விளையாடிய சச்சினுக்கும் தொற்று உறுதியாகியதாக அவர் தெரிவித்திருந்த நிலையில், தொடரில் விளையாடிய ஏனைய இந்திய மற்றும் வெளிநாட்டு வீரர்களுக்கும் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.



# ஐ.பி.எல். கிரிக்கெட் திருவிழா! மும்பை அணிக்கும் புதிய சீருடை

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரின் 14ஆவது சீசனில் களமிறங்கும் மும்பை இந்தியன்ஸ் அணியின் புதிய சீருடை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.



தனது அதிகாரப்பூர்வ டுவிட்டர் பக்கத்தில் புதிய சீருடையின் படத்தை மும்பை இந்தியன்ஸ் நிர்வாகம் பதிவிட்டுள்ளது. தற்போதைய சம்பியனான மும்பை அணி தனது முதல் லீக் ஆட்டத்தில் ஏப்ரல் 9 ஆம் திகதி ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியுடன் மோதுகிறது. இந்தப் போட்டி சென்னை, சேப்பாக்கம் எம்.ஏ.சிதம்பரம் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# இங்கிலாந்து கால்பந்து பிரீமியர் லீக் புதிய சீசன் ஒகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி ஆரம்பமாகும்

இங்கிலாந்து நாட்டில் நடைபெற்று வரும் பிரீமியர் லீக் கால்பந்துத் தொடர், உலகத்திலேயே அதிகம் பார்வையாளர்களைக் கொண்ட லீக் என்ற பெருமையை உடையது. சுமார் 220 நாடுகளில் ஒளிபரப்பப்படும் பிரீமியர் லீக்கின் தற்போதைய சீசன் வருகின்ற மே மாதம் 23ஆம் திகதி முடிவடைகிறது.

இந்த சீசனில் பிரீமியர் லீக் போட்டிகளில் இன்னும் சில போட்டிகளே எஞ்சியுள்ள நிலையில் எந்த அணிகள் சம்பியன்ஸ் லீக் போட்டிகளுக்கு தகுதி பெறப்போகின்றன, யூரோப்பா லீக் போட்டிகளுக்கு தகுதி பெறும் அணிகள் எவை என்பதெல்லாம் மே மாதம் 23 ஆம் திகதி உறுதியாகிவிடும்.

அதனைத் தொடர்ந்து ஜீன் மாதம் 12 ஆம் திகதி ஐரோப்பிய நாடுகள் பங்கு பெறும் யூரோ போட்டிகள் ஆரம்பமாகவிருக்கின்றன. கால்பந்து தொடர்களில் உலகக் கிண்ணத்துக்கு அடுத்து புகழ்பெற்ற தொடர் என்று யூரோவைக் குறிப்பிடலாம். சுமார் 12 நாடுகளில் நடைபெறும் இந்தப் போட்டிகள் ஜூலை மாதம் 13 ஆம் திகதியோடு நிறைவு பெறும்.

இந்நிலையில் இங்கிலாந்து நாட்டில் நடைபெறும் பிரீமியர் லீக்கின் புதிய சீசனின் ஆரம்பத் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. யூரோ போட்டிகள் நிறைவு பெற்று ஒரு மாதம் கழித்து ஒகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி பிரீமியர் லீக் கால்பந்துப் போட்டிகள் ஆரம்பித்து, 2022 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதியில் முடிவடையும் என்று தகவல் தரப்பட்டுள்ளது.

PREMIER LEAGUE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்தர்களின் ஆதரவைப்பெற தமிழ், முஸ்லிம் மீது இனவாதம்

## தொடர்ந்தால் பாரிய விளைவு வரும் என்கிறார் காவிந்த



ஜனநாயக கொள்கைக்கு முரணாகச் செயற்படும் நாட்டை சர்வதேசம் புறக்கணிக்கும் என்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் இனியாவது விளங்கிக் கொள்ள வேண்டும்.

பௌத்த மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக அரசாங்கம் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் இனவாத செயற்பாடுகள் தொடருமாயின் பாரிய விளைவுகள் ஏற்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளமை தொடர்பில் வினவிய போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்

நாட்டின் ஆட்சி முறைமையை அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை ஒரு நாட்டை அங்கீகரிக்கும். அந்த வகையில் இலங்கை ஜனநாயக நாடு என்ற நிலைப்பாட்டில் அங்கீகரிக் கப்பட்டுள்ளது.

ஜனநாயக கொள்கைக்கு முரணாகச் செயற்படும் போது சர்வதேசம் கேள்வி எழுப்பும் இதற்கு பதிலளிக்க வேண்டியது ஆட்சியில் உள்ள அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

இந்த விடயத்தில் இறையாண்மை என்பதைக்கூறி சர்வதேசத்தை வெறுக்க முடியாது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை பல விடயங்களை உணர்த்தியுள்ளது.

2009 ஆம் ஆண்டு காலத்தில் இருந்து இலங்கை விவகாரம் மனித உரிமை பேரவையில் பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது .

இலங்கைக்கு எதிராக ஆரம்பத்தில் இருந்து செயற்பட்ட நாடுகள் இம்முறையும் இலங்கைக்கு எதிராகவே செயற்பட்டுள்ளன.

ஆனால் கடந்த வருடம் இலங்கைக்கு ஆதரவாக செயற்பட்ட நாடுகள் இம்முறை இலங்கை விவகாரத்தில் அமைதி காத்துள்ளமை தொடர்பாக அதிக கவனம் செலுத்த வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை விவகாரம் தொடர்பாக முன்வைக்கப்பட்ட பிரேரணையில் இறுதிக்கட்ட யுத்தத்தில் இடம்பெற்றனவாகக் குறிப்பிடப்படும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படவில்லை.

மாறாக கடந்த ஒன்றரை வருட காலப் பகுதியில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் செயற்பாடுகள் தொடர்பாக அதிகளவு அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டுக்கு பிறகு தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகம் மீது அரசாங்கத்தால் கட்டவிழ்த்துவிடப்பட்ட மனித அடக்குமுறை தொடர்பில் மனித உரிமை பேரவையில் அதிக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

கொவிட் -19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழந்த முஸ்லிம் சமூகத்தினரது ஜனாஸாக்கள் பலவந்தமான முறையில் தகனம் செய்தல், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தை இலக்காக கொண்டு தொல்பொருள் அகழ்வாராய்ச்சி, தமிழ் சமூகத்தினர் மீது வெறுப்பூட்டும் பேச்சுக்கள் ஆகியவற்றைப் பிரதானமாகக் குறிப்பிட வேண்டும்.

ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு முரணாகச் செயற்படும் நாட்டை சர்வதேசம் புறக்கணிக்கும் என்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் இனியாவது விளங்கிக் கொள்ள வேண்டும்.

குறுகிய அரசியல் நோக்குடன் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தின் மீது தொடரும் அடக்குமுறைகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். தனி சிங்கள மக்களின் ஆட்சியமைத்துள்ளோம் என்று பெருமிதம் கொள்ளும் அரசாங்கத்தை சிங்கள பௌத்த மக்களே புறக்கணிப்பார்கள். - என்றார்.




**மணமகள்மார் தேவை**

* கனடாவில் வாழும் 34 வயது கோவியர் குல செவ்வாய் குற்றமற்ற மணமகனுக்கும்,
* பிரான்ஸில் வாழும் 36 வயது 4இல் செவ்வாயுள்ள சாண்டர் குல மணமகனுக்கும் மணமகளை இலங்கையில் தேடுகிறோம்.

**தொடர்புகளுக்கு:**
**0014166661855**
**077 650 5097**

**சமையல் ஆள் தேவை**

**சைவஉணவுதயாரிக்கத்தெரிந்த சமையல் ஆள் தேவை. 45 வயதிற்கு உட்பட்ட ஆண் விரும்பத்தக்கது.**

**தொடர்புகளுக்கு:**
**076 740 3814**

**FOR SALE**

German Shepherd Female Puppy

- 5 t Week Old
- Black and Tan Colour
- Father - direct import
- Mother - Country Breed
- Worm treatment Given

Contact number - 0776300370

## முல்லைத்தீவு வீடொன்றில் மீண்டும் வாள்வெட்டு தாக்கு

முல்லைத்தீவு மல்லாவி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புகழேந்திநகர் பகுதியில் கடந்த 13 ஆம் திகதி இரவு இளம் குடும்பஸ்தர் ஒருவர் மீது இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நான்கு பேரால் வாள்வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

சம்பவத்தில் காயமடைந்த இளம் குடும்பஸ்தர் மல்லாவி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வீடு திரும்பிய நிலையில், கடந்த சனிக்கிழமை இரவு குறித்த வீட்டுக்குச் சென்ற தாக்குதல் தாரிகள் வீட்டின் கதவுகளை உடைத்து சேதப்படுத்தியுள்ளனர்.

இதேநேரம் வீட்டில் இருந்தவர்கள் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## புத்தூரில் ஒருவர் வெட்டிக் கொலை

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாணம், புத்தூர் வீரவாணி பகுதியில் தனிமையில் வசித்த ஆண் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார் என அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் அவரது வீட்டுக்கு அருகில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த துரைராசா சந்திரகோபால் (வயது-52) என்பவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்டவருடன் பழைய பகையை வைத்து சிலர் இந்தக் கொலையைச் செய்துள்ளனர் என்று ஆரம்ப கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## கடையை உடைத்துக்கொண்டு உட்புகுந்தது வான்; 2 பேர் பலி!

அநுராதபுரம் – திரிப்பனே பகுதியில் நடந்த வாகன விபத்தில் பெண்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த விபத்து திரிப்பனே – ஏ 9 வீதியில் கடந்த சனிக்கிழமை மதியம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது 15 பேரை ஏற்றிக்கொண்டு சென்ற வான் திடீரென வீதியின் வலது புறத்துக்குத் திரும்பி கடை ஒன்றை உடைத்துக்கொண்டு மரத்தின் மீது மோதி விபத்துக்குள்ளாகி உள்ளது.

விபத்து நடந்த நேரத்தில் வானில் 15 பேர் இருந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாகன சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## பௌத்தத்துக்கே அதிக முன்னுரிமை புதிய அரசமைப்புக்கு சு.க. பரிந்துரை

புதிய அரசியலமைப்பில் பௌத்தத்துக்கு அதிக முன்னுரிமை வழங்கும் யோசனையை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முன்வைத்துள்ளது.

புதிய அரசமைப்பின் வரைவு தொடர்பான நிபுணர் குழுவிடம் கடந்த சனிக்கிழமை மாலை கட்சியின் யோசனைகளை முன்வைத்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தபோதே அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா இவ்வாறு கூறினார்.

மேலும் அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான சரத்துக்களை வலுப்படுத்தும் திட்டத்தையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் விலங்கு பாதுகாப்பு தொடர்பான பரிந்துரைகளையும் முன்வைத்ததாக அவர் குறிப்பிட்டார்.

கிராமப்புறங்களில் உள்ளவர்கள் மனுக்களைத் தாக்கல் செய்யவும், அவர்கள் தங்கள் குறைகளை முன்வைக்கும் விதமாக உயர் நீதிமன்றத்திடம் இருந்த அதிகாரத்தை மாவட்ட மேல் நீதிமன்றங்களுக்கு வழங்குகின்றமை தொடர்பாகவும் பரிந்துரைத்ததாக நிமல் சிரிபால டி சில்வா கூறினார்.



அத்தோடு மாகாண சபை முறையை வலுப்படுத்துவது தொடர்பாக முன்னுரிமை வாக்களிப்பு முறையை இரத்து செய்யவும் தேர்தல்களில் 25 வீதம் பெண் பிரதிநிதித்துவம் கட்டாயமாக்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளதாகவும் நிமல் சிரிபால டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.03.2021இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org